

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்

ரோமர் 12:12

மலர் 13
இதழ் 01

செய்தி மலர்
மே 2012



# செயலாளரிடமிருந்து

இயேசு கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, அன்பராம் இயேசுவின் இன்ப நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன்.

சென்ற மாதம் பெரிய வெள்ளி ஆராதனை, உயிர்த்தெழுந்து ஞாயிறு ஆராதனை, மற்றும் அறுப்பின் பண்டிகை, அனைத்திலும் கர்த்தரின் வழிநடத்துதல் இருந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இம் மாதம் நம் சபையின் மூலமாக TVGM ஸ்தாபகர் சகோ.P.T. கிறிஸ்டோபர் அவர்கள் வர இருக்கிறார்கள். அவர்களின் ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்து தரும்படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள். நான்கு பேர் ஞானஸ்தானத்திற்கென்று தங்களை ஒப்பு கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அவர்களுக்காகவும் அவர்கள் எடுத்திருக்கிற இந்த தீர்மானத்தில் நிலைத்திருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இம்மாதத்தில் நாம் சில முக்கியமான காரியங்களை கர்த்தரின் நாம மகிமைக்கென்று செய்ய இருக்கின்றபடியால் வேதாகமத்தில் சில கேள்விகளை நாம் ஆராய்ந்து பார்ப்பது நல்லதும் அவசியமானதும் கூட

1.மாயையான உலக பொருட்கள், ஆஸ்தி செல்வாக்கு இவைகள் எல்லாவற்றிக்கும் மேலாக ஆத்தும நேசர் இயேசு கிறிஸ்துவை அதிகமாய் நேசிக்கிறீர்களா? (யோவான் 21:15:17)ஏனென்றால் வேதம் சொல்லுகிறது (1 கொரி 19:22)இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறாதவன் சபிக்கப்பட்டவன்.

2. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கீர்களா(அப் 16:31)இரட்சிப்பு என்பது மறுபடியும் பிறப்பது (யோவான் 3:3-5)ரோமர் 10:9,10,11 பழைய பாவ குணம் மாறி மனத்தாழ்மை நீடிய பொருமை.அன்பு (எபேசியர் 4:2,3) இவைகள் உங்களிடம் பெருகியிருக்கின்றதா?

3. உங்கள் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதியிருக்கிறதென்ற நிச்சயம் உண்டா? வெளி 21:27 ஏனென்றால் நம் கிரியைகளை அறிந்து (வெளி 1:12)அதற்கேற்றபடி பலன் கொடுப்பவர் சீக்கிரமாய் வர இருக்கிறார்.

4.மனம் திரும்பி முழுக்கு ஞானஸ்தானம் (கலா 3:27) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்தானம் பெற வேண்டுமென்று (மாற் 16:16) நம்மை உணர்த்துகிறது.

5. நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியை பெற்றீர்களா? (அப் 19:2) அல்லது எபேசு நகரத்தாரை போல பரிசுத்த ஆவி உண்டென்பதை அறியாதிருக்கிறீர்களா.?

6.அந்நிய பாஷையில் தேவனோடு சம்பாஷிக்கிறீர்களா?

*(1 கொரி 14:2-5)உங்களுக்கும் சபைக்கும் இருக்கின்ற தேவ பக்தியானது இன்னும் விருத்தியடையத்தக்கதாக தேவனோடு உறவாடுகின்றாயா.?*

*7. இடைவிடாது ஜெப ஜீவியம் (1 தெச 5:17) உண்டா அல்லது நீங்கள் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்க முடியாதபடி (1 தெச 5:19 ) அவித்து போட்ட ஆவியை உடையவர்களாக சபையில் கலந்து கொள்கிறீர்களா*

*8. தேவ வசனங்களை ஆராய்ந்து மகிழ்கின்ற (சங் 119:103) அனுபவம் உண்டா? தாவீது ராஜாவை போல (105,113),வீண் சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியமாயிருக்கிறாயா?அரசனாக இருந்த போதும் தாவீதை போல வேத வசனம் (சங் 119:97)நாள் முழுவதும் தியானிக்கிற அனுபவம் உண்டா?*

*9 முழு உள்ளத்தோடும் மெய்யான வாஞ்சையோடும் நன்றி பலியோடும் மகிழ்ச்சியோடும் (சங் 100:2)கர்த்தருக்கு ஆராதனை செய்ய குறிப்பிட்ட ஆராதனை நேரத்திற்கு(சங் 5:3) முன்பாகவே கர்த்தரின் ஆலய பிரகாரங்களில் சென்று கர்த்திருக்கின்ற அனுபவம் உண்டா?(எலி 10:25) சபை கூடி வருதலை அசட்டை செய்து நிர்விசாரியாய் காலங்கழிக்கிறாயா?*

*10. அப்போஸ்தலர் 2:40 வேதத்துக்கு புறம்பான ஒரு ஜீவியம் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை விட்டு பிரிந்து (சங்1:1-3) கர்த்தருடைய வேதத்தில் பிரியம் காட்டி இருக்கிறாயா?*

*11. தானி 12:3 அழிவுக்கு நேராக நரகத்துக்கு நேராக சென்று கொண்டிருக்கிறவர்களை மீட்கின்ற ஊழியத்தில் உன் அற்பணிப்பு என்ன? சுவிசேஷம் சொல்லுகிறாயா? நீதி 11:30ன்படி கர்த்தர் அருளும் பலனை பெற்று கொண்டு ஆசையாய் இருக்கிறாயா?*

*12. 1 கொரி 1 :7 இயேசுகிறிஸ்து வருகைக்காக காத்திருக்கிறாயா? 1 தெச 4:16) (மத் 25:10) ஆயத்தமா? 1பேதுரு 3:16 உங்கள் நல்ல நடக்கையை தூஷி க்கிறவர்கள் வெட்கப்படும்படி நல்மனசாட்சியுடையவர்களாய் இருங்கள். 1பேதுரு 3:15 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து உங்களை விசாரிப்பவர்களுக்கு சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல ஆயத்தமாயிருங்கள்.*

*13. எசே 38:7 நீ ஆயத்தப்படு உன்னோடே கூடின உன் எல்லா கூட்டத்தையும் .ஆயத்தப்படுவோம் பிறரை ஆயத்தப்படுத்துவோம் கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக..*

*இந்த மாத ஊழியகாரியங்களுக்காய் ஜெபித்துக்கொள்ளுங்கள்.ஊழியங்களில் பங்கு பெறுங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்*

இவண்

**கர்த்தரின் பணியில்**

**அன்பு சகோதரன்** A. *ஜஸ்டின் சுந்தரராஜ்*







# ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் (ரோமர் 12:12)

ஜெபம் மனிதனையும் இறைவனையும் இணைக்கும் ஒரு பாலம் அல்ல. தேவனுக்கும் நமக்கும் உள்ள இடை வெளியை தகர்த்திடும் ஓர் வலிமைமிக்க ஆயுதம். எலியாவின் ஜெபம் அக்கினியை வனாந்தரத்தில் இருந்து இறக்கினது. அன்னாளின் ஜெபம் ஒரு சாமுவேலை உருவாக்கினது. ஒரு கள்ளனின் ஜெபம் பரதீசியில் அவனுக்கு ஒரு இடத்தை கொடுத்து, பவுல் சீலாவின் ஜெபம் சிறை சாலையின் அஸ்திபாரத்தை அசைத்தது. ஜெபம், தேவனோடு பேசும் வெறும் வார்த்தைகள் அல்ல. தேவனோடு நம்மை ஒருங்கிணைத்திடும் வார்த்தை கையிறுகள்.

ஒரு மனிதன் ஜெபிக்கும் போது, ஆண்டவரின் பிரசன்னம் அங்கே இருக்கிறது. ஏனென்றால், அவர் ஜெபத்தை கேட்கிறார். (சங் 65:2) எனவேதான் இயேசு, மனுஷகுமாரனாய் இந்த பூமியிலே வாழ்ந்த போது ஒரு மலையின் மேல் ஏறி, இரவு முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொணடிருந்தார் (லூக்கா 6:12)எனவேதான் இயேசு சொன்னார் ‘‘ஆகையால் இனி சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்’’(லூக்கா 21:36)

கொலேசியர் 4:2ல் பார்க்கிறோம். ‘‘இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்’’ ஒரு பிரசித்தி பெற்ற பிரசிங்கியார் பேசுகிறார் என்றால் கூட்டம் அலை மோதும். ஜெபம் பண்ண வாருங்கள் என்றால் காலி நாற்காலிகள்தான் இருக்கும். மனுஷர் ஜெபிக்க முடியாதபடிக்கு சாத்தான் முடமாக்கி போட்டுவிடுகிறான் காரணம் சாத்தானுக்கு தெரியும் – ‘‘ஜெபம் – மனிதனையும் தேவனையும் இணைக்கும் ஓர் ஆயுதம்’’ 1பேதுரு 4:7 சொல்லுகிறது. ‘‘எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.’’

தேவனோடு நம்முடைய உறவு சரியியாய் இருக்கும்போது சக மனிதர்களோடு உள்ள உறவு வலுப்படுகிறது இன்று ஜெபிக்காத குடும்பங்களில்தான் பிரிவிணைகள் வருகிறது. ஜெபிக்காத திருச்சபைகளில் விரிசல்கள். பிரிவிணைகள் உண்டாகிறது ஜெபிக்காத மனிதனின் இதயத்தில் சமாதானம் இல்லை.

## 1.எதிர்ப்புகளை கட்டிபோடும் ஜெபம்.

தானியேல் ஜெபத்தில் கெட்டிக்காரன் சாத்தான் அவனது முழங்காலை கட்டி போட முயற்சி செய்தான் ஜெபத்தால் சிங்கக்கெபி என்ற கட்டளை பிறந்தது. தானியேல் தான் முன் செய்து வந்தபடியே,தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படி இட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான், நடந்தது என்ன? தானியேலை சிங்க கெபியிலே போட்டார்கள் சிங்கங்கள் தானியேலை சேதப்டுத்தாதபடிக்கு தேவன் தன்னுடைய தூதனை அனுப்பி,சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார். பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றி திரிகிறபடியால் (1பேதுரு5:8) விழித்திருந்து ஜெபிக்க வேண்டியது நம் கடமையாகும். சிங்கங்களின் வாய்க்கு நம்மை தப்புவிக்க வல்ல தேவனை நோக்கி ஜெபிப்போம். நம் குடும்பத்திற்காய்,

திருச்சபைகளுக்காய், தேசங்களுக்காய் ஜெபிப்போம்.

## 2. கசப்பை களிப்பாய் மாற்றும் ஜெபம்.

மனக்கசப்பு மனமடிவை உண்டாக்கும்.மனங்கசந்து பலர் தற்கொலைதான் முடிவு என்று வாழ்வை முடித்து கொள்கிறார்கள். அன்னாள் என்ற பெண், மனங்கசந்து,மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள், (1சாமு 1:10)காத்தருடைய சன்னிதியில் இருதயத்தை ஊற்றிவிட்டாள், நடந்தது என்ன? தேவன் சாமுவேல் என்ற தீர்க்கதரிசியை அன்னாளுக்கு கொடுத்தார். அன்னாளின் இருதயம் கர்த்தருக்குள் களிகூர்ந்து.(1 சாமு 2:1). கசப்பான அனுபவங்கள்,கசப்பான வார்த்தைகள் இதுதான் உலகம் தரும் பரிசு. அன்பே உருவான தேவன், அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு களிப்பையும், சந்தோஷத்தையும் தருகிறது அதை கொடுப்பதற்கு தேவன் வல்லமையுள்ளவர். நம்முடைய ஜெபம் நம் வாழ்வில், நம் குடும்பத்தில்,திருச்சபையில், காணப்படும் கசப்புகளை களிப்பாய் மாற்றும், ஒரு வல்லமை மிக்க ஆயுதம்.

## 3. தகுதியற்றவனை தகுதி படுத்தும் ஜெபம்

1 தீமோத்தேயு 4:5 சொல்லுகிறது "அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும், பரிசுத்தமாக்கப்படும்."தகுதியற்ற மனிதன், பாவம் நிறைந்த மனிதன், ஜெபிக்கும்போது பரிசுத்தமாகிறான். தேவனுடைய பிரசன்னம் அவனை மாற்றுகிறது. "பூவுடன் சேர்ந்து நாறும் மணக்கும்" என்ற பழமொழிக்கேற்ப. ஜெபிக்கின்ற மனம் தேவனோடு இணையும்போது, அது மனம்கமழும் மல்லிகையாய் மாறுகிறது. இயேசு அடியெடுத்து வைத்தால் போதும், திருமணவீட்டின் குறைவுகள் நிறை –வாய் மாறும். சகேயு வீட்டில் இரட்சிப்பின் சுடரொளி வீசும். இயேசுவின் அருகில் சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்" என்றான். நடந்தது என்ன? அவனுடைய ஜெபம், அவனுடைய வாழ்க்கையை தலை கீழாக மாற்றிபேட்டது. பாதாளம் நோக்கி சென்று கொண்டிருந்த அவனுக்கு இயேசு பரதேசில் ஒரு இடம் கொடுத்தார். ஜெபம் ஒரு ஆத்துமாவை இரட்சித்தது. சகோதரி எஸ்தரின் ஜெபம் அநேகரை அழிவுக்கு தப்புவித்தது. சகோதரனே, சகோதரியே, இன்று நீயும் நானும் செய்யும் ஜெபம்,அநேகருடைய ஆத்துமாவை தப்புவிக்க வல்லமையுள்ளது என்பதை மறந்து போகாதே.

விசுவாசிகளுக்கு தேவன் அருளி உள்ள பலத்த ஆயுதம் –ஜெபம் இதை அநேகர் உணர்ந்தும், உணராமலும்,உபயோகபடுத்தாமல் இருக்கிறோம். இதனால் பல ஆசீர்வாதங்களை இழந்து போக–றோம். தேவ பிரசன்னதை இழந்து போகிறோம். நம்முடைய ஜெபங்கள் நம்மை பரிசுத்தபடுத்துகிறது. பரலோக ராஜ்ஜியத்திற்கு நம்மை தகுதிபடுத்துகிறது தேவனுக்கு முன்பாக எழும்பும் தூபவர்கத்தின் புகையாய் இருக்கிறது (வெளி 8:3–4).

பிரியமான சகோதரனே சகோதரியே தூபம் போல எங்கள் ஜெபங்களை ஏற்றுகொள்ளுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக முழங்கால் படியிட்டு நம்மை முழுவதும் தருவோம். ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்.

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் கிறிஸ்டோபர்



# Orphanage scheme Address in India

**THE DIRECTER**
**NAVAJEEVAN SEVA MONDAL**
Sevoor (post)
Katpadi (TK)
Vellore Districk
pincode 632106
Tamil nadu
Phone .no 0416-6536400
Mobile. 9488534625
E-Mail. cwh@india-ministries.com

**SECRETARY CHILDREN WELFARE HOME**
Mullainagar 3rd Street
Flat no - 15
Thanakanukulam (post)
Thiru Nagar
Madurai - 625006
Phone .no 0452-2483383
Mobile. 99952783940
E-Mail. cwh@india-ministries.com

**WORLD VISION OF INDIA**
Mrs. Lily venkatarangan
World vision
16 VOC main Road
Kodampakkam
Chennai 600024
Phone .no 44- -422870703
Mobile. 914424807070
E-Mail. indiasponsors@wvi.org

**TAMIL VILLAGE GOSPHEL MISSION (TVGM)**
**BRO. CHRISTOPHER**
100 village - somarasanpettai
Trichy - 620102
Phone .no 0431-2607241
Mobile. 9444980445
E-Mail. 100village@tvgm.org

**SHARING LOVE MISSION**
**S. SAM GUNASELAN**
5/168, caldwell colny
3rd street
Tuticorin - 628008
Phone .no 0461-2375468
Mobile. 9345675468
E-Mail. info@shalomission.in

**GERIZIM REHABILITATION TRUST**
**G. J. YESUDIAN**
24th D cross
Ejipura
vivekanagar post
Bangalore -560047
Phone .no 91- 080- 25712015
E-Mail. gerizim@bgl.vsnl.net.in

**EPHPHATHA ORPHAN HOME**
**D. NEHRU SAMUEL**
20. Gandhi nagar
6th street
Thiruvanamalai (Dist)
Pin - 606601
Mobile. 9443480774
E-Mail. nehru1962@yahoo.com

**CHRIST SPECIAL HIGH SCHOOL (HANDICAPPED)**
Mrs. Banumathi Sugirtharaj
Plot .no .1695 poikunam Road
Kallakurichi branch
Villupuram Districk
Sangarapuram -606401
Phone .no 04151-295295 /223467
Mobile. 9442313800
E-Mail. ezhile@yahoo.com

**NEW LIFE CALVARY PRAYER MISSION TRUST**
**REV. D.P NOHA YOWANARAJ**
No 51 Church Street
Meal petti road
Seruvangai Gudiyatham,
Vellore (Dist) 632602
Mobile. 9786822379
Mobile. 9585084671
E-Mail. nova.cefi@gmail.com

**GLORY FILLED CHRIST PRAYER HOUSE**
**A, DAVID**
343 babaji gardens
Press Colony (post)
Coimbatore - 641019
Tamil Nadu - India
Mobile. 9943844898
E-Mail. davidshahah@yahoo.com

**MERCY FOUNDATION**
Bro. Jimrock
A Public Charitable Trust
15 Ananda Nagar
Chennimalai Road
Prundurai 638052
Mobile. 9843722269
E-Mail. sjimrock@gmail.com

**ELSHADDAI CHARITABLE TRUST**
**MR. SAMUEL DANIEL**
The Apostolic Church
3/1 Nethaji Road
B.B Kulam - Madurai
Mobile. 9444980445
E-Mail. 100village@tvgm.org

**BARNABAS RUREL SOCIAL DEVELAPMENT SOCICTY**
Ps. Arul Samel
Gulalpadi (Nathavadi)
Vadamathur post -606702
Thiruvanamalai Districk
Phone .no 04188-252277
Mobile. 9444657002
E-Mail. arul-samuel@yahoo.com

**PREMAVASAM**
selvyn roy
Thiru V.ka Road
Gerugambakkam
Chennai 600122
Tamil nadu - india
Phone .no 044-23820330
044-23820771
E-Mail. premav@vsnl.com

**CSI REHABILITIATION CENTER**
**BOBBY A.Z**
CSi Compound
Wood villa Road
Kobdaikanal -624101
Phone - 04542- 241696 - 243686
E-Mail. csirehabkodai@gmail.com

**LIFE CHRISTIAN CENTER TRUST**
Phone - 91-9943844898
E-Mail. sureshtitus@yahoo.com

# 2012 ஏப்ரல் மாத வேத வினாவிற்கான பதில்கள்.

1. யோபு - யோபு 3:26
2. யோபு - யோபு 30:15
3. யோபு - யோபு 30:1
4. பில்தாத் - யோபு 8:3
5. புத்தியில்லாத மனுஷன் - யோபு 11:12
6. யோபு - யோபு 7:20
7. யோபு - யோபு 10:1
8. யோபு - யோபு 6:2
9. யோபு - யோபு 31:1
10. யோபு - யோபு 29:4
11. யோபு - யோபு 16:6
12. யோபு - யோபு 13:23
13. பாதாளம் - யோபு 10:21
14. எலிபாஸ் - யோபு 22:9
15. யோபுவின் மனைவி - யோபு 2:10

## 2012 ஏப்ரல் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. மெர்ஸிலின் தயா
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. ஜெபா
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. அனுஷூயா டேவிட்சன்
சகோதரி. சாந்தி ஸ்ரீனிவாசன்
சகோதரி. பிங்கி சாம்

சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். ஆரோக்கியராஜ்
சகோதரர். ஜான்
சகோதரர். சுதாகர்

**சபை வாக்குத்தத்தம் – 2012**

பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்என்றார். யோசுவா 1:9

# 2012 மே மாத வேத வினா பகுதி

1. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள், என்றது யார்?

2. விசுவாசத்தினால் வராதது என்ன? என்று பவுல் சொல்லுகிறார்?

3. விசுவாசத்தில் வல்லவர் யார்?

4. அக்கிரமகாரருக்காக மரித்த ஒரு நீதிமான் யார்?

5. கனம் பண்ணுவதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ளுங்கள் என்றவர் யார்?

6. ரோமாபுரியில் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட ஸ்திரி யார்?

7. தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்பு கொடுத்தார் என வாசிப்பதெங்கே?

8. தேவன் அவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்பு கொடுத்தார் என்று வாசிப்பதெங்கே?

9. தீமையை வெறுத்து நன்மையை பெற்றுக் கொண்டிருங்கள் என்று வாசிப்பதெங்கே?

10. எனக்கு இடைவிடாத மன வேதனையும் உண்டாயிருக்கிறது என்றது யார்?

11. தேவனுடைய வாக்குத்தத்தத்தை குறித்து அவன் விசுவாசமாய் சந்தேகபடாமல்... விசுவாசத்தில் வல்லவனானவன் யார் ?

12. மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவ பக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்று வாசிப்தெங்கே ?

13. தேவன் தான் முன்னரிந்து கொண்ட தம்முடைய ஜனங்களை தேவன் தள்ளிவிடவில்லை என வாசிப்பதெங்கே?

14. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது என வாசிப்பதெங்கே?

15. கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள் என்றது யார்?

விடைகளை வருகின்ற **20-05-2012** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **ரோமர்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக". ரோ 16:20

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வன் : டினோ சிஜி
செல்வன் : ஜோ நிர்மல் சிங்
செல்வன் : அசரீயா பிரவீண் குமார்
செல்வன் : மில்டன் கிஷோர்குமார்
செல்வன் : கதிரவன் சுகுமாரன்

செல்வி : அன்னாள் ஆசீர்வாதம்
செல்வி : ஏஞ்சலின் பிரிசில்லா
செல்வி : சித்ரா ராஜன்
செல்வி : ரீமா ரோஸ் எபிநேசர்
செல்வி : இவாஞ்சலின் ஷாஜன்
செல்வி : மீனா குமாரி சுகுமாரன்
செல்வி : சவுரியம்மாள்

சகோதரி : மரியா குளோரி
சகோதரி : சித்ரா மேரி
சகோதரி : எலிசபெத் ஸ்டாலின்
சகோதரி : ஜெயலஷ்மி கொமையன்
சகோதரி :ரெஞ்சித குமாரி
சகோதரி : குமுதினி வில்சன்
சகோதரி : மெடில்டா ராணி
சகோதரி : சுகந்தி தம்பு குமார்
சகோதரி : குளோரி நவோமி ஆல்பஸ் ஜேம்ஸ் - சகோதரி : ஜெகதாம்பால் ராஜவேல்

சகோ : சஜின் ஜீவா
சகோ : ஜெப கிங்ஸ்லி
சகோ : ஜோன்ஸ செல்வா சிங்
சகோ : P. கொம்மையன்
சகோ : ஜஸ்டின் சுந்தரராஜ்
சகோ : வெங்கடேசன்
சகோ : எபநேசர்
சகோ : ரிச்சர்ட் சாலமன்
சகோ : கலிய மூர்த்தி
சகோ : ஜோனஸ் ராஜ்
சகோ : A.M சஜின் ராஜன்
சகோ : பால்ராஜ் ஆமோஸ்
சகோ : தர்மர்
சகோ : பிரகாஷ்
சகோ : பூபால பாண்டியன்
சகோ : T. ஸ்டீஃபன்
சகோ : ராஜவேல்
சகோ : லாரன்ஸ்
சகோ : ஆசீர்வாதம்
சகோ : பக்தராஜ்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" .ஆதி 12:2

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு : சஜின் ராஜன்
திருமதி – திரு : S S பாண்டியன்
திருமதி – திரு : எபிநேசர்
திருமதி – திரு : ஸ்டாலின்
திருமதி – திரு : M வில்ஸன்
திருமதி – திரு : ஆல்பர்ட் சுவாமிநாதன்
திருமதி – திரு : கிரண் குமார்
திருமதி – திரு : அந்தோனி சாமி
திருமதி – திரு : F தாமஸ்
திருமதி – திரு : கொம்மையன்
திருமதி – திரு : ஆல்பிஸ் ஜேம்ஸ்
திருமதி – திரு : ஜான் மில்லர்
திருமதி – திரு : ஈஸ்டர் ராஜ்
திருமதி – திரு : பிரேம் குமார்
திருமதி – திரு : பால் பாண்டிய ராஜ்
திருமதி – திரு : ஜெயசேகர்
திருமதி – திரு : சாம் தேவநேசன்
திருமதி – திரு : பூபால பாண்டியன்
திருமதி – திரு : எட்வர்ட் ராஜா

# 2012 மே மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை செய்தி |
| --- | --- |
| 04-05-2012 | சகோ. P.T கிறிஸ்டோபர் (TVGM, Tamilnadu, INDIA) |
| 11-05-2012 | தாய்மார்கள் தின ஆராதனை |
| 18-05-2012 | உபவாச திருவிருந்து ஆராதனை |
| 25-05-2012 | சகோ. ஜெயசேகர் சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
| --- | --- |
| 6- 05 -2012 | சகோ. P.T கிறிஸ்டோபர் (TVGM, Tamilnadu, INDIA) |
| 13 -05 -2012 | சகோ. P.T கிறிஸ்டோபர் (TVGM, Tamilnadu, INDIA) |
| 20-05 -2012 | சகோ. P.T கிறிஸ்டோபர் (TVGM, Tamilnadu, INDIA) |
| 27-05-2012 | சகோ. கிறிஸ்டோபர் |

10/05/2012 அன்று முழு இரவு ஜெபம்

இடம் : பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி குவைத்.

நேரம் : இரவு 11:00 முதல் காலை 3:00 மணி வரை

சிறப்பு செய்தியாளர் சகோ. சகோ. P.T கிறிஸ்டோபர் (TVGM, Tamilnadu, INDIA)

14/05/2012 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை

இடம் : சகோதரி சாந்தி ஜெயசேகர் அவர்கள் இல்லம் (அபுஹலிஃபா)

18/05/2012 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை

25/05/2012 அன்று பொது மன்றம் கூட்டம் (செயற்குழு நியமனம்)

இடம் : ... சபையின் இல்லத்தில் வைத்து நடைபெறும்

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

## இயேசு இருந்த இடத்தில் குறைவு !!!!!

உங்கள் குடும்பத்தில் குறைவு ஏற்படும் போது என்ன செய்கிறீர்கள்? கூடி ஆலோசனை செய்கிறீர்களா? உடனே வெளியே ஓடி மனித உதவியை நாடி குறைவை நீக்கி முயற்சிக்கிறீர்களா?கூடி ஆலோசனை செய்கிறீர்களா? ஓடி மனித உதவியை நாடி குறைவை நீக்க முயற்சிக்கிறீர்களா?

அன்பானவர்களே!

குறைவு ஏற்பட்டவுடன் குறைவை நிறைவாக்க வல்லவரை நோக்குங்கள், அவரை நாடுங்கள், அவரிடம் போய் சொல்லுங்கள், குடும்பத்தில் ஒரு கஷ்டம், பிரச்சனை வியாதி வந்தால், உடனே இயேசுவின் பாதத்தண்டை செல்லுங்கள், அவரிடம் தெரியடுத்துங்கள்.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.(பிலி. 4:6)

எந்த குறைவுக்கும் இயேசு கிறிஸ்துவை உடனே நாடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். குறைவு இயேசு கிறஸ்துவிடம் நெருங்க செய்யும் ஒரு தூண்டுதலாக மாறட்டும். கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதே நீங்கள் அவரண்டை வரவேண்டும் என்பதற்காக என்பதை அறிந்து கொள்ளுங்கள். இயேசுவண்டை தள்ளும் ஒரு உந்து சக்தி உங்கள் குடும்பத்தில் உண்டாகும் குறைவே ஆகும். குறைவு உங்களை குன்றிபோக அல்ல அசையாத குன்றாக மாற்ற வருகிறது. அல்லேலுயா.

### விருந்தாளியா? வீட்டுக்காரரா?

இயேசு கல்யாண வீட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார், கல்யாண வீட்டில் குறைவு உண்டாயிற்று, சாதாரணமாக ஒரு விருந்தில் உணவு பொருள் குறைந்துவிட்டால், உடனே விருந்தாளிக்கு தெரிவிக்காமல் மூடி மறைக்க முயற்சிப்பது வழக்கம். இயேசு கிறிஸ்து சாதாரண விருந்தாளியாக அல்ல சிறப்பு விருந்திணராக அழைக்கப்பட்டிருந்தார். உங்கள் திருமண வீட்டிற்கு ஒரு சிறப்பு விருந்தாளியாக முதல் அமைச்சர் வந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், விருந்தில் பாயாசம் குறைந்து விட்டது, உடனே முதலமைச்சரிடம் போய் பாயாசம் இல்லை என்ன செய்வது என்று கேட்பீர்களா? சிறப்பு விருந்தாளிக்கு தெரிந்து விடாமல் இருக்கும்படி காரியத்தை அடக்கி கொள்வீர்கள் அல்லவா? வீட்டார்கள் மட்டும் ஆலோசித்து காரியத்தை நிறைவேற்ற முயற்சிப்பீர்கள் அல்லவா?

### விருந்தாளி வீட்டுக்காரர் ஆனார்

ஆனால் கானாவூர் கல்யாண வீட்டாரோ குறைவு உண்டானபோது உடனே சிறப்பு விருந்தாளியாகிய இயேசுவினிடத்தில் போய், திராட்சை ரசம் இல்லை என கூறுகிறார்கள். விருந்தில் குறைவு உண்டானால் வீட்டின் தலைவரிடம்தான் போய் சொல்லுவதுதான் வழக்கம். சிறப்பு விருந்தாளிக்குத் தெரியாமல் மறைப்பது வழக்கம் சிறப்பு விருந்தாளிக்குத் தெரியாமல் மறைப்பது வழக்கம்.

இந்த கலியாண வீட்டில் இயேசு கிறிஸ்துவினிடத்தில் போய் சொல்லுவதற்கு காரணம் அவர் விருந்தாளியாக அழைக்கப்பட்ட போதும்,அவரை வீட்டுக்காரராக ஆக்கிவிட்டார்கள் கலியாணத்தை நடத்தும் வீட்டின் தலைவராக இயேசு கிறிஸ்துவை அங்கீகிரித்துவிட்டார்கள்.

பிரியமானவர்களே

இயேசு உங்கள் இல்லத்தில் விருந்தாளியா? அல்லது வீட்டுக்காரரா? விருந்தாளி நிரந்தரமானவர் அல்ல. விருந்தாளி விருந்தை கவனிப்பவர் அல்ல. விருந்தாளி குறைவை உண்டாக்குகிறவர். குறைவை போக்குகிறவர் அல்ல. இயேசு இல்லத்தில் விருந்தாளியாக வந்தாலும் வீட்டுக்காரராக ஏற்படுத்திவிடுங்கள். வீட்டின் தலைவராக ஏற்படுத்திவிடுங்கள். வீட்டின் தலைவராக ஆக்குங்கள்.

இயேசு இன்னும் உங்கள் வீட்டில் மறைமுகமான விருநதாளியாகதான் இருக்கிறாரோ? வீட்டின் தலைவராக ஆகவில்லையோ? இப்போதே இயேசுவே நீங்கள் எங்கள் வீட்டின் விருந்தாளி அல்ல, வீட்டின் தலைவர், உங்களை எங்கள் வீட்டின் தலைவராக ஏற்றுக் கொள்கிறோம். என்று கூறுங்கள்.

## தலைவரின் பதில் பொறுபற்றதா?

திராட்சைரசம் இல்லை என்று இயேசு கிறிஸ்துவினிடத்தில் சொன்னவுடன் 'அப்படியா, இதோ அற்புதத்தை செய்கிறேன் பாருங்கள்' என்று பதில் சொல்லாமல் மிக சர்வ சாதரணமாக, கவலையில்லாதவர் போல, கரிசனை அற்றவர் போல ,பொறுப்பில்லாதவர் போல 'என் வேலை இன்னும் வரவில்லை' என்று சொன்னார். எனினும் அவர் பதிலை கேட்டு பயப்படாமல் அவிசுவாசப்படாமல்: அவர் ஆவணம் செய்வார் என்ற நம்பிக்கையுடன், மரியாள் வேலைகாரர்களுக்கு, ' அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்' என்று கட்டளையிட்டார்.

## அவர் கட்டளைக்கு கீழ்படியுங்கள்!

பிரியமான சகோதரனே சகோதரியே உங்கள் குறைவு நிறைவாக, இயேசுவின் கட்டளைக்கு கீழ்படிய வேண்டும், கிறிஸ்து என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்தால் உங்கள் குறைவு நீங்கும் என்பது உறுதி.

(இன்னும் தொடரும்)

# கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகக்கூடவோம்

## (Being ready for the coming of Christ )

நாம் அவருடைய வருகைக்கு ஆயத்தமாகும்படியான மூன்று பகுதிகளை எடுத்து கூறினார் அது என்ன அந்த மூன்று ரகசியம் என்ன என்பதை குறித்து காண்போம். முதலாவதாக அந்தரங்க ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள் இரண்டாவதாக, உங்களுக்கு தரப்பட்ட ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள் மூன்றாவதாக, உங்கள் சக விசுவாசிகளுக்காக ஊழியம் செய்திட உண்மையுள்ளவர்களாய் இருங்கள். முதலாவதாக அந்தரங்க ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள்என்பதை குறித்து காண்போம்

**1. அந்தரங்க ஜீவியத்தில் உண்மையுள்ளவர்களாய் இருங்கள்.**

(மத்தேயு 25:1–13) இவ்வசனங்களில் பத்து கன்னிகைகளை உவமானமாக வைத்து இயேசு பேசினார். இவர்கள் அத்தனை பேருமே கன்னிகைகள்தான். யாக்கோபு 4:4 தரும் விளக்கத்தின்படி இவர்கள் ஆவிக்குறிய வேசிகள் அல்ல. ஆம் இந்த பத்து பேருமே கன்னிகைகள் அதாவது ..மனுஷருக்கு முன்பாக .. இந்த பத்து பேரும் நல்ல சாட்சியை பெற்றிருந்தார்கள். இயேசு குறிப்பிட்டபடி இவர்களுடைய வெளிச்சமாகிய நற்கிரியைகள் மனுஷருக்கு முன்பாக பிரகாசித்துக் கொண்டுதான் இருந்தது. (மத்தேயு 5:16) இருப்பினும் இந்த பத்து கன்னிகைகளில் ஐந்து பேர் மாத்திரமே புத்தியுள்ளவர்களாயிருந்தார்கள். இந்த உண்மை ஆரம்பத்தில் எல்லோருக்கும் தெரியாமலே இருந்தது. எப்படியெனில் இவர்களில் ஐந்துபேர் மாத்திரமே தங்கள் பாத்திரங்களில் எண்ணையை கொண்டுபோனார்கள்.

*இருளில் ஒரு பிரகாசமான வெளிச்சத்தை தெளிவாக காண்கிறது போல புத்தியுள்ள ஸ்திரிகள் கொண்டு சென்ற பாத்திரத்திலிருந்து எண்ணையோ அந்த இருளில் மற்றவர்கள் காணக்கூடாததாகவே இருந்தது. எண்ணையுடன் கூடிய இந்த பாத்திரம். தேவனுக்கு முன்பாக மாத்திரமே காணப்படும் நம்முடைய மறைவான ஜீவியத்தை குறிக்கிறது.*

நாம் எல்லோருமே நமக்குள் அவரவர் ஒரு பாத்திரத்தை வைத்திருக்கிறோம். ஆனால் அந்த பாத்திரத்தில் ஏதாகிலும் எண்ணை இருக்கிறதா? அல்லது இல்லையா? என்பதே இப்போது கேள்வியாகும்.

முழு வேதாகமத்திலும் எண்ணையானது பரிசுத்தாவியானவருக்கு அடையாளமாக கூறப்படுகிறது. அதாவது பரிசுத்தாவியானவர் மூலமாய் நம்முடைய ஆவியில் பரிமாற்றம் செய்யப்படும் தேவனுடைய ஜீவனையே (தெய்வ வாழ்க்கையையே) இந்த எண்ணை குறிக்கிறது.மனுஷர் காணும்படியான பரிசுத்த ஜீவியமே தீவட்டியில் எரிந்து கொண்டிருக்கும் ஒளியாகும்(யோவான் 1:4) ஆனால் ஒருவன் தன் அந்தரங்க வாழ்க்கையில் பெற்றிருக்கும் மறைவான ஜீவியமே எண்ணையாகும். காரியம் இவ்வாறாக இருக்க இன்று அநேகர் தங்களின் வெளியரங்கமான சாட்சியில் மாத்திரமே திருப்தி கண்டுவிட்டார்கள். இவர்களையே புத்தியில்லாதவர்கள் என இயேசு கூறினார். பாடுகளின் மத்தியிலும் பரீட்சையின் மத்தியிலுமே இவர்கள் தங்களிடமிருந்து வெளியரங்கமான வெளிச்சம் போதுமானதாக இல்லை என்ற அவல நிலையை காண்கிறார்கள்.

(இரகசியங்கள் தொடரும்)

Praise the Lord

# ஞானமும் தேவ பெலனும்

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை கவனித்து பார்ப்பீர்களானால், அவரே ஞானமாயிருந்தாலும் (1 யோவான் 7:15) வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சர்யபட்டார்கள். ஒவ்வொரு நாளும் பிதாவை நோக்கி ஜெபித்தார்கள்.

கர்த்தருக்கு பயப்படுதல் என்பது இயேசுவுக்கு உகந்த வாசனையாய் இருந்தது. பரிசுத்தாவியினால் எப்போழுதும் நிறைந்திருந்தார்.

எனவே இயேசு கிறிஸ்துவை குறித்து (லூக்கா 2:52) வாசிக்கிறோம். இயேசுவானவர் ஞானத்திலும், தேவ கிருபையிலும், மனுஷர்தயவிலும்,அதிகமாய் விருத்தியடைந்தார்.

பிரியமான வாலிப தங்கையே, தம்பியே, ஒரு வாலிபன் எல்லாவகையிலும் சிறந்து விளங்கக்கூடியவன் எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் அவனுக்கு அத்துப்படி எதைகேட்டாலும் விரல்நுனியில் பதில் வைத்துக்கொண்டிருப்பார், ஆனால் படிப்பு அல்லது சப்ஜெட் என்று எடுத்துக் கொண்டால் Zero ஆனால் அவன் ஆண்டவரை தன் வாழ்க்கையில் Heroவாக ஏற்றுக் கொண்டார், பின்னர் என்ன? சொல்ல வேண்டுமா அவர் வாழ்க்கையில் அவருக்கு என்ன தேவையே ஆண்டவர் அதை அவருக்கு கொடுத்தார். அவருக்கு பயப்படும்படி நம்மிடத்தில் கீழ்படிதல் உண்டா? அல்லது அவரது வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுக்கிறோமா? அவரை சொந்த இரட்சகராக நாம் ஏற்றுக் கொண்டபின்னும் உலகத்திற்காக நாம் வாழ்கிறோமா? அல்லது அவருக்காக நாம் வாழ்கிறோமா? இயேசுவை நாம் ஏற்றுக் கொண்டபின் நம்வாழ்க்கையில் எதாவது மாற்றம் உண்டா? எல்லாம் நமக்கு தானாக வரும் ஆனால் ஞானம் அவருக்கு பயப்படும் பொழுது மாத்திரமே வரும்.

ஆண்டவரை ஏற்றுக் கொண்ட பின்னும் கூட ஞான இல்லாமல் காரியங்களை செய்கிறோம் நம்மை குறித்து மற்றவர் என்ன பேசுவார்கள் என்பதை கூட சில நேரங்களில் நாம் மறந்து சில காரியங்களை செய்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு ஒரு வேதனைக்குறிய காரியம். சகோதரனே நமக்கு வேதத்தின் ஞானம் வேண்டும். அதுவே நம்மை குருடாக்கிவிடாதபடி நமக்குள் விழிப்பு வேண்டும் (Spritual Blind) என்று சொல்லுவார்கள். நமக்கு கொடுத்திருக்கும் வரம் என்ன என்பதை பகுத்தரிய வேண்டும். எல்லாம் என்னால் கூடும் என்கிற ஆணவத்தை ஆண்டவர் வெறுக்கிறார். நம்முடைய தாலந்து என்ன என்பதை உணர்ந்தவர்களாக நாம் செயல்படும்போது நாம் நமக்கு ஆண்டவர் கொடுத்த தாலந்தை ஆண்டவருடைய நாம மகிமைக்கென்று நேர்த்தியாக ஆண்டவருக்கு செலுத்தும் போது ஆண்டவரும் மகிழுவார். ஆண்டவருடைய நாமமும் மகிமைபடும். ஆண்டவரை அறியாத புறஜாதியார்கள் (அன்னிய தேவர்களை வணங்கக்கூடியவர்கள்) கூட அவர்களுடைய


தேவர்களை நோத்தியாய் வணங்குவதை பார்க்கலாம். பிரியமான சகோதரனே சகோதரியே நாம் வணங்கக் கூடிய தேவன் ஜீவிக்கிற தேவன் நேற்றும் இன்றும் மாறாதவாராக, மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உங்களுடனே இருக்கிறேன் என்று சொன்ன ஆண்டவர், நமக்காக ஜீவபலியாக கோர சிலுவையிலே தன்னை ஒப்பு கொடுத்தவர். அப்படிப்பட்ட ஆண்டவரை நாம் ஆராதிக்கிறோம். அந்த ஆண்டவரை ஏனோ தானோ என்று நாம் தொழுவது எப்படிபட்ட ஒரு தவறை நாம் செய்கிறோம் என்பதை உணர வேண்டும், வாலிபம் என்பது பலவானுடைய அம்புக்கு ஒப்பாக வேதம் கூறுகிறது அப்படியானால் நமக்கு இருக்கும் பெலன் எதிலே வெளிப்பட வேண்டும் விதண்டா வாதம் பேசுவதிலா? அல்லது மற்றவர்களுக்காக பரிந்து பேசி சச்சரவை உண்டாக்குவதிலா? அல்ல சகோதரனே சகோதரியே ஆண்டவருடைய வசனத்தை உபதேசிப்பதில், ஆண்டவருக்கு ஆராதனை செய்வதில், ஆண்டவருக்கென்று ஒரு சேனையை உருவாக்குவதில், என்று இப்படிபட்ட காரியங்களில் வெளிபடுத்துவோம், எது செய்தாலும் ஆண்டவருக்கு நேர்த்தியாய் செய்வோம்.

அதற்காக என்ன விலை கொடுத்தாலும் பரவாயில்லை. நாம் நம்முடைய ஆண்டவரின் நாமத்தை மகிமைபடுத்தும் வண்ணமாக (நம்மை வெளிபடுத்தும் வண்ணமாக அல்ல) நேர்த்தியாய் செய்வோம். பலவானுடைய அம்பு என்ன வேகத்தில் செயல்படுமோ! அதே போல வேகமாக செயல்படுவோம். எதை செய்தாலும் ஆண்டவருடைய நாமம் மாத்திரமே மகிமைபடவேண்டும். மேலும் நமக்கு மிகமிக முக்கியமான தேவையான ஒன்று அதுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அதை பெற்றுக்கொள்ள நாம் வாஞ்சிக்க வேண்டும். ஏனெனில் வேதம் உரைப்பது என்ன என்று பார்த்தோமானால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான் என்று. ஆண்டவரிடத்தில் கேட்போம் வாஞ்சையோடு கேட்போம் விசுவாசத்தோடு கேட்போம் நிச்சயம் பெற்றுக்கொள்வோம்.

ஏன் நமக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வேண்டும். ஆண்டவருடை எந்த ஒரு காரியமானாலும் சரி அதை செய்து முடிக்க நம் சொந்த பெலத்தினால் ஒன்றுமே ஆகாது. வேதத்தில் பார்க்கிறோம் பேதுருவுக்கு ஆண்டவர் அப்படி ஒரு வரத்தை கொடுத்திருந்தார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லோரையும் தொட்டுதான் சுகமாக்கினார், ஆனால் பேதுரு நடந்து செல்லும் பொழுது அவரது நிழல்பட்டு சொஸ்தமானார்கள் என்று வேதம் கூறுகிறது என்ன காரணம், ஆண்டவர் உயிர்தெழுந்த பின் உங்களுக்கு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவேன் என்று வாக்கு கொடுத்ததுமல்லாமல் நம்மோடு கூட இருந்து நமக்கு உதவி செய்ய திருவுளம் பற்றினார்.

ஆகவே பிரியமான தங்கையே தம்பியே ஞானம் தேவன் தருவது, பெலனும் தேவனால் வருவது, எனவே தேவனுக்கு பயப்படும் பொழுது ஞானம் வரும் தேவனிடத்தில் கேட்கும் பொழுது பெலன் வரும். தேவனுக்கென்று எழுந்து பிரகாசிப்போம் தேவ பெலத்தினால் உங்களை ஆண்டவர் நிரப்புவாராக ஆமென்

# சகோதரிகள் பகுதி



## விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (யாக்கோபு 5:15.)

*விசுவாசமுள்ள ஜெபம் என்பதை ஊக்கமான ஜெபம் என்றும் சொல்லலாம். எபிரேயர் 11ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது விசுவாசம் என்பது என்ன என்றும் நம் முற்பிதாக்கள் எப்படி தேவன் மீது விசுவாசம் வைத்து, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார்கள் என்றும் தெரிந்துக்கொள்ளலாம். புதிய ஏற்பாட்டில் அநேகர் இயேசுவின் மீது உறுதியான விசுவாசம் வைத்து அவரிடத்தில் தெய்வீக சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். நம்முடைய ஜெபம் விசுவாசமுள்ளதாய் மாறவேண்டுமானால் நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்று பார்க்கலாம்.*

**1.நாம் சுகவீனமாயிருப்பது தேவசித்தம் அல்ல என்பதை விசுவாசிக்கவேண்டும்:**

*நம் தேவன் சுகத்தை விரும்புகிற தேவன் மத்தேயு 8:2,3 இங்கு குஷ்டரோகி ஒருவன் ஆண்டவருடைய சித்தத்தை அறிந்தவனாய் விசுவாசத்தோடு அவரிடத்தில் வந்தான், உடனே இயேசு எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்று சொல்லி அவனை சுகப்படுத்தினார். பிசாசுதான் நாம் சுகவீனமாய் முடங்கி கிடப்பதை விரும்புகிறவன். அவன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நம் தேவன் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித் திரிந்தார் என்று அப்போஸ் 10:38 சொல்கிறது. பொல்லாதவர்களாகிய நாமே நம்முடைய பிள்ளைகள் சுகமாய் இருக்கவேண்டும் என்று நினைக்கும்போது, பூரண சற்குணராயிருக்கிற நம்முடைய பரமபிதா எவ்வளவாய் நம் சுகத்தில் அக்கறை வைத்திருப்பார். இதை விசுவாசித்து ஜெபிக்கும் போது தேவன் அவர் சித்தத்தின்படி நமக்கு சுகம் தருவார்.*

**2.அவர் நம்முடைய பெலவீனங்களையும் நோய்களையும் சிலுவையிலே சுமந்தார் என்று விசுவாசிக்கவேண்டும்**

*ஆண்டவராகிய இயேசு சிலுவையிலே நம்முடைய பாவங்களை மட்டும் சுமக்கவில்லை. அதோடு நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நோய்களையும் சுமந்தார் என்று மத்தேயு 8:17 சொல்கிறது. அவர் தலையிலிருந்து தமது கால்கள் வரை காயப்படுத்தப்பட்டார். எல்லா வலி வேதனைகளையும் பொருத்துக்கொண்டார். ஆகவே நமக்கு உடலிலே பெலவீனங்கள், வலிகள் சோர்வுகள் ஏற்படும் போதெல்லாம் அந்த சிலுவையை நோக்கிப்பார்த்து தேவபெலனை பெற்றுக்கொள்வோம். ஏனென்றால் அவருடைய தழும்புகளால் நாம் சுகமானோம் என்று எழுதியிருக்கிறதே. இதை நாம் விசுவாசித்து ஜெபிக்கும்போது ஒவ்வொரு நாளும் அவருடைய கிருபை நம்மை தாங்கி, நம் பெலவீனங்களிலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்.*

**3.அவர் நமக்கு சுகம் கொடுக்க வல்லமையுள்ளவர் என்பதை விசுவாசிக்கவேண்டும்**

*நம் தேவனால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமே இல்லை, அதுவும் விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று எழுதியிருக்கிறது. நம் தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவர் எல்லாவற்றையும் படைத்த சிருஷ்டி கர்த்தா.*

அவர் வார்த்தை வல்லமையுள்ளது, அவர் தமது வார்த்தையை அனுப்பி சுகப்படுத்துகிறார். மத்தேயு 9:27,28,29 ஆகிய வசனங்களில் இரண்டு குருடர் அவர்களை சுகமாக்கும்படி அவரிடத்தில் வந்தனர். இயேசு அவர்களை பார்த்து கேட்டது, என்னிடத்தில் வல்லமை உண்டென்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? அவர்கள் விசுவாசத்தை கண்டு அவர், உங்கள் விசுவாசத்தின்படி ஆகக்கடவது என்று சொல்லி அவர்களை சுகப்படுத்தினார். உங்கள் விசுவாசத்தை ஊழியர்கள் மீது வைக்கவேண்டாம். இயேசுவிடம் விசுவாசமாயிருங்கள் லூக்கா 5:17 ல் பிணியாளிகளை குணமாக்க தக்கதாக அவருடைய வல்லமை விளங்கிற்று என்று பார்க்கின்றோம். அதிக நெருக்கத்தின் மத்தியில் ஒரு திமிர்வாதக்காரனை குணபடுத்தும் படி இயேசுவிடம் விசுவாசத்தோடு கொண்டு வந்தார்கள். கொண்டுவந்தவர்களின் விசுவாசத்தை கண்டு இயேசு அவனை சுகமாக்கினார். ஆகவே நாம் ஜெபிக்கும் போது கொஞ்சமும் சந்தேகப்படாமல் அவரிடத்தில் கேட்டு விசுவாசத்தோடு அதை பெற்றுக் கொள்ள காத்திருந்தோமானால் அவர் நிச்சயமாய் நம்மில் கிரியை செய்ய வல்லவராய் இருக்கிறார்.


**4. எனக்கு கர்த்தர் சுகம் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும்**

கர்த்தர் என் ஜெபத்தை கேட்டு எனக்கு சுகம் தருவாரா ? நான் ஒரு பாவி எனவே நான் இந்த நிலையில் தான் இருக்கவேண்டும், நான் தனிமையாய் ஏதோ ஒரு மூலையில் இருக்கிறேன் என்னை எப்படி பார்ப்பார் அவர் என்றெல்லாம் எண்ணி அவிசுவாசத்துடன் நாம் வாழக்கூடாது அவர் எல்லாருக்காகவும் மரித்தார், எல்லாருக்கும் சுகம் அவர் கரத்தில் பரிபூரணமாயுள்ளது. அவர் பட்சபாதமுள்ளவர் அல்லவே. அவருடைய கண்கள் எல்லாரையும் நோக்கிப்பார்க்கிறது என்று வாசிக்கிறோமே. மாற்கு 6:56 சொல்கிறது அவரை தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் என்று. ஒருவேளை தாமதம் ஏற்படலாம். 38 வருடம் சுகவீனமாக இருந்தவனை இயேசு சுகப்படுத்தினார். 18 வருடம் நிமிரக்கூடாத கூனியாயிருந்த ஸ்திரியை சுகப்படுத்தினார். எத்தனை வருடங்களானாலும் சரி, அது நம் ஆண்டவருக்கு ஒரு பொருட்டல்ல. டாக்டர்கள் ஒருவேளை கைவிடலாம் ஆனால் நம் தேவன் அற்புத சுகமளிக்க வல்லவர்.அப்போஸ்தலர் 5:16 சுற்றுப்பட்டணத்திலிருந்தும் திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம். ஆகவே, அவரிடத்திலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ள விசுவாசத்தோடு நாம் ஆயத்தமாக வேண்டும்.

விசுவாசிகள் என்று பெயர் பெற்ற நாம் அவ்விசுவாசத்தோடு ஜெபிக்கலாமா? ஆண்டவர் நம்மிடத்தில் மலையளவு விசுவாசத்தை கேட்கவில்லை. கடுகளவு விசுவாசத்தை தான் எதிர்பார்க்கின்றார். ஆகவே மாற்கு 11:24ன் படி நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ அவைகளைபெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். ஆமென்!

அல்லேலூயா!...

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி .பிரியா பிரேம்குமார்



# சென்ற மாத அறுப்பின் பண்டிகை ஆராதனையின் ஒரு சில காட்சிகள்










உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

69924812 -- 69950127

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷியா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil.kw@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும்,உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது

Private circulation